
# பொய்யா விளக்கு

இலக்கு-15 சுடர்:6

JL
Q6 m2.11, N56PI
N70
145372

# பொய்யா விளக்கு



டு : 15
ர் : 6

ஜுலை-1970

லகின் ஒளி நானே
— கிறிஸ்துநாதர்

# பொய்யா விளக்கு

விளக்கு : 15 ★ ஜூன்—1970 ★ சுடர் : 6


## என்னோடு வருகிறீர்களா?

[ யாக்கூப் ]

**4**

பக்கத்து அறையிலே ஒரே அமர்க்களம்.

என் மனைவி அற்புதமாய் உடல் நலம் பெற்றுவிட்ட காரணத்தால் எங்களின் புனித யாத்திரை இன்னும் 10 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியைக் கேட்டு ஸ்டுடெண்டுகளுக்குத் தலைகால் தெரியாத மகிழ்ச்சி. அந்த அமர்க்களத்துக்கு அதுவே மூலகாரணம் என்பதை ஜேம்ஸும் நானும் உணர்ந்து கொண்டோம்.

இரவு மணி 10 அடித்து ஓய்ந்தது.

வெகுநேரமாக ஜேம்ஸும் நானும் பாலஸ்தீன் நாட்டுத் தரைப் படத்தை வைத்துக் கொண்டு மறு நாளையப் 'புரோகிராமை'த் தயாரித்துக்கொண்டிருந்தோம். ஏதோ ஒருவகையாக எங்கள் புரோகிராமின் அடுத்த கட்டத்தைத் தயாரித்துவிட்டு அதை ஸ்டுடெண்டுகளுக்கு அறிவிப்பதற்காகப் பக்கத்து அறைக்குச் சென்றோம்.

“பாய்ஸ்! அரட்டையடித்தது போதும், சீக்கிரமாய் படுக்கப்போங்க. நாளைக்கு அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்.”

“ஓகே சார்... ஓகே... சார் நாளைக்கு நாம் எங்கே போக வேண்டும்?”

“காலை உணவை முடித்ததும் டூரிஸ்ட் பஸ்ஸில் ஏறி, ஜெரிக்கோ வழியாக ஜோர்தான் நதிக்கரைக்குச் செல்வோம். ஏசு பெருமான் திருமுழுக்காட்டப் பெற்ற இடத்தைப் பார்த்துவிட்டு சமாரியாவுக்குப் போவோம்; நாளை இரவை சமாரியாவில் வைத்துக் கொள்வோம்... ஓகே? ...”

“ஓகே சார்....”

“குட் நைட் பாய்ஸ்,”

“குட் நைட் சார்”

* * *

கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத மானிடர் பலர் வாழும் இந்த உலகில் சொன்ன நேரப்படி ஒரு வினாடிகூட வழுவாது எழுப்பியது எங்கள் \ அலாரம் அலறிக் கொண்டே. ஆதவன் அப்போதுதான் தன் கண்களைக் கசக்கிக் கொண்டு கீழ்வானில் கண்விழித்தான். நேரத்தை வீணாக்காது நாங்களும் காலை உணவை முடித்துக் கொண்டு வெளியில் காத்துக்கிடந்த டூரிஸ்ட் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

இயற்கையின் குளுமை எருசலேம் நகர் முழுவதையும் மூடிக்கொண்டிருந்தது.

பஸ் புறப்பட்டதும் குளிர்காற்று எங்கள் உடலைத் தீண்டியது. அதை உணர்ந்து கொண்ட டிரைவர் பஸ்ஸை மெதுவாக ஓட்டிச் சென்றான். எருசலேமை விட்டுச் சென்றுகொண்டிருந்த எங்களை விட்டு நகரின் குளுமையும் விடைபெற்றுக் கொண்டு சென்றது.

ஆதவனோ தன் பயணத்தை வான வீதியில் முடுக்கி விட்டுக் கொண்டிருந்தான்.

145372 ஜ்
211



பெத்தானியா ஊரின் வழியாக எங்கள் பஸ் ஊர்ந்து சென்றது.

இயேசுவின் பொது வாழ்வில் அடிக்கடி தங்குவ தற்குச் சத்திரம் போல் பயன்பட்ட ஊரல்லவா பெத் தானியா? எனவே அங்கே பஸ்ஸை நிறுத்திவிட்டு ஒரு சில இடங்களைப் பார்க்கச் சென்றோம்.

இயேசுவின் நண்பர்களான லாசர், மரியாள் மார்த்தாள் குடியிருந்த வீடாகக் கருதப்படும் ஓரிடத்தைச் சென்று பார்த்தோம். அதன்பின் ஜேம்ஸ் எங்களை அந்த ஊர் கல்லறை மைதானத்துக்கு அழைத்துச் சென்றான். நம் நாட்டுப் பகுதிகளில் காணப்படும் இடுகாட்டுமைதானம் போன்றதல்ல பாலஸ்தீன் நாட்டுப்புறக் கல்லறை மை தானங்கள். பாறைகளில் குடைந்தெடுக்கப்பட்ட கல்லறை களைக் கொண்டது அந்த மைதானம். அவற்றில் ஒன்றைக் காட்டி “யாக்கோப்! பார்த்தாயா அந்தக் கல்லறையை, அங்கேதான் இறந்துபோன லாசரை அடக்கம் செய்தார் கள் என்று பாரம்பரியம் கூறுகிறது. அக்கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுக் கிடந்த லாசரின் சடலத்துக்கு உயிர் கொடுத்து எழுப்பினார் ஆண்டவர்,” என்றான ஜேம்ஸ். உடனே நற்செய்தி நூலில் சித்திரிக்கப்பட்டுள்ள அந்தக் காட்சி எங்கள் மனக்கண் முன் நிழலாடியது. இறைமகன் இயேசுவின் திருப்பாதங்கள் பட்ட இட மெல்லாம் இன்றும் தெய்வமணம் பரப்பிக்கொண்டிருப் பதை எங்களால் உணரமுடிந்தது.

மீண்டும் பஸ்ஸில் வந்து அமர்ந்து கொண்டோம்.

ஆதவனின் வெப்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உணரத்தொடங்கினோம்.

பஸ் ஓடத் தொடங்கியது. ஐந்து அல்லது ஆறு நிமிட ஓட்டத்தின்பின் “யாக்கூப்! அதோ பார் அந்த சத்திரத்தை. அதற்கு ‘நல்ல சமாரித்தன் சத்திரம்’ என்று பெயர். ஆனால் இப்போது அந்தச் சத்திரம் அராபிய போலீஸ் ஸ்டேஷனாகப் பயன்படுத்தப்படுகிறது” என்றான் ஜேம்ஸ்.

IN 52PV 1170.15.6

பஸ்ஸில் அமர்ந்திருந்த எல்லாருமே அந்தச் சத்திரத்தின் மீது கண்களை மேயவிட்டோம். பஸ் ஓடிக் கொண்டுதானிருந்தது. ஆனால் என் மனத்திரையில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் 'சடுகுடு' விளையாட ஆரம்பித்தன. நற்செய்தி நூலில் அத்துணை நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட்டுள்ள 'நல்ல சமாரித்தன்' உவமை என் மனக்கண் முன் முழு நீளப் படமாக ஓடத் தொடங்கியது.

யூத மறைச் சட்ட வல்லுநன் ஒருவன் இயேசுவை நெருங்கி வருவதும், முடிவிலா வாழ்வு பெறத் தான் என்ன செய்யவேண்டுமென்று வினவுவதும், அதற்கு மறுமொழியாக இயேசு "ஆண்டவனை அன்பு செய்; உன்னைப்போல் உன் அயலானுக்கும் அன்பு காட்டு" என்னும் கட்டளையைக் கூறுவதும் இப்போது என் கண் முன் நடப்பதாகவே பட்டது.

"என் அயலான் யார்?" என்ற அந்த வல்லுநனின் கேள்விக்கு இயேசு பெருமான் கூறிய அழகு உவமைதான் அந்த நல்ல சமாரித்தன் உவமை.

எருசலேமிலிருந்து ஜெரிக்கோவுக்கு சென்று கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவன் கள்வர் கையில் அகப்பட்டு தான் கொண்டு சென்ற பொருள்களெல்லாம் பறிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டுக் குற்றுயிராக விடப்பட்டுக் கிடந்தான். அதே வழியில் சென்ற யூத மதக்குரு ஒருவரும், சமுதாயத்தில் வசதிபடைத்த பேர்வழி ஒருவனும் துன்பக் குளத்தில் மிதந்து கிடந்த அந்த வழிப்போக்க யூதனைக் கண்டும் காணாததுமாக விலகிச்சென்றனர். ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரித்தன் ஒருவன் துன்புறும் அந்த ஜீவனைக் கண்டு மனமிளகி அவனருகில் சென்று காயங்களுக்கு எண்ணை வார்த்துக் குடிக்க திராட்சை ரசம் கொடுத்தான். குற்றுயிராய் கிடந்தவனைத் தன் கழுதையின் மேல் ஏற்றி பெத்தானிக்கு அருகிலிருந்த சத்திரத்தில் சிகிச்சை பெற ஏற்பாடு செய்தான். யூத மக்களிடையே சமாரியர்கள் கீழ்சாதி மக்களாகக் கருதப்படுபவர். கொடுக்கல் வாங்கல்



எதுவுமேயில்லாமல் விலக்கி வைக்கப்பட்டவர்கள். அப்படியிருந்தும் இன்று அந்தச் சமாரித்தன், ஜென்ம விரோதியான ஒரு யூதனின் இடுக்கண் களைவதன் மூலம் பிறர் அன்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறான்!

அந்தக் காட்சியனைத்தும் இன்று நடப்பதுபோன்ற பிரேமை எனக்கு. நெளிந்து நெளிந்து சென்ற பாதை வழியாக எங்கள் பஸ்ஸும் உடலை வளைத்து வளைத்து நகர்ந்து கொண்டிருந்தது.

ஏறத்தாழ அரைமணி நேரமாவது நான் இந்தக் காட்சியைக் கண்டு அனுபவித்திருக்க வேண்டும். நேரம் செல்லச் செல்ல வெய்யிலின் கொடுமையும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

கண்ணுக் கெட்டிய தூரம் வரை வெறும் மணற்பரப்பு மணல் வெளியினூடே மரம் மட்டையற்ற மொட்டைப் பாறைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குந்தியிருந்தன. பாலைவனப் படகுகள் (ஒட்டகங்கள்) ஒரு சில சற்று தொலைவில் ஆடி அசைந்து செல்லுவதைக் கண்டோம்.

பாலைவனத்தைக் கண்டதுமே எங்களில் பலருக்கும் தண்ணீர் தாகம் தலைதூக்கியது. முன்னெச்சரிக்கையோடு பஸ் கண்டக்டர் எருசலேமிலிருந்தே தண்ணீர் எடுத்து வந்திருந்தான். எனவே தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொண்டோம். மணல் வெளிச் சாலையானதால் மணலை வாரியிறைத்துக் கொண்டே பஸ் சென்று கொண்டிருந்தது.

கடற்பயணிகள் நெடுநேரமாக வெறும் தண்ணீர் பரப்பையே கண்டு சலித்துக் கொண்டிருக்கும்போது திடீரென தீவு ஒன்றைக் கண்டால் எவ்வளவு மகிழ்ச்சி படைவார்களோ அதேபோல வெகு நேரமாக வெறும் கானல் நீர் நிறைந்த பாலையைக் கண்டு கொண்டு சென்ற எங்கள் கண்களும் திடீரென பச்சப்பசேலென நிமிர்ந்து நின்ற ஈச்சமரங்களையும், ஜெரிக்கோ நகர் சோலைவனப் பகுதியையும் கண்டு களிநடம் புரிந்தன.

வழி நெடுக ஓடை ஒன்றின் சலசலப்பும் கேட்கத் தொடங்கியது. "ஜேம்ஸ்! அது என்னப்பா சலசலப்பு? நாம் பயணம் செய்யும் சாலையின் அடியில் ஓடும் ஓடை போலல்லவா தண்ணீர் சலசலக்கிறது" என்றேன்.

"ஆமாம் யாக்கூப். நாம் இப்போது கடல் மட்டத்துக்கு ஏறத்தாழ 1000 அடி கீழே தான் இருக்கிறோம். அநாதைப் பிள்ளையைப் போல் எங்கோ பிறந்து பாலஸ்தீன் பகுதிகளில் நுழைந்து வளைந்து வளைந்து சென்று சாக்கடலில் போய் சங்கமமாகும் யோர்தான் நதிபாயும் ஓசைதான் அந்தச் சலசலப்பு" என்றான் ஜேம்ஸ்.

நாங்கள் காணப் புறப்பட்ட இடம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டோம். இவ்வளவு நேரம் ஓடிக் கொண்டிருந்த எங்கள் பஸ் திடீரென ஓரிடத்தில் களைப்புத்தீர நின்றது. "என்ன டிரைவர்? பஸ்ஸில் ஏதாவது கோளாறு?" என்றேன்.

"இல்லை சார். இயேசு திருமுழுக்குப் பெற்ற யோர்தான் பகுதி வந்தாச்சு சார்" என்றான் டிரைவர்.

எல்லாரும் இறங்கினோம். டிரைவர் காட்டிய ஓரிடத்தில் நாங்களும் இறங்கி எங்கள் கால்களை நனைத்துக் கொண்டோம். உடனே இனம் தெரியாத ஓர் உணர்வு என் உள்ளத்தைக் கவ்விக் கொண்டது. பாவமாசு அணுகாத பரம்பொருளான இறை இயேசு பாவிகளோடு பாவியாக இந்த இடத்திலேதான், திருமுழுக்கு அருளப்பரின் கரங்களால் திருநீராட்டப்பட்டார் என்று எண்ணியதும் என் உடலெல்லாம் புல்லரித்தது. நம் நாட்டுப் பகுதிகளில் ஓடும் நதி நீருக்கும், யோர்தான் நதி நீருக்கும் யாதொரு வேறுபாடு இல்லையென்றாலும் இறைமகன் இயேசுவின் உடல்பட்டுப் புனிதம் பெற்ற நதியல்லவா யோர்தான்? இவ்வாறு பரவசத்தில் நான் எவ்வளவு நேரம் இருந்தேனோ தெரியாது. திடீரென "யாக்கூப்!" என்னும் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தேன். "சாக்கடலை நோக்கிப் போவோம்" என்றான் ஜேம்ஸ்.



ஒரு சில நிமிடங்களில் சாக்கடலின் கரையோரம் வந்து சேர்ந்தோம். அராபியர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு ஹோட்டல் இருந்தது. இதைத் தவிர அங்கே வேறு எந்தக் கட்டிடமோ, மக்கள் வாழ் பகுதியோ கிடையாது.

சாக்கடல் என்று சரியாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள். யோர்தான் நதி கொணரும் மீன் சாக்கடலில் நுழைந்ததும் சாவைத் தழுவிக் கொள்ளுகின்றன. அந்தத் தண்ணீரின் தன்மைதான் என்ன என்பதை அறிந்துணர எனக்கு ஓர் அற்ப ஆசை எழுந்தது. என் கைவிரல் ஒன்றை அக்கடல் தண்ணீரில் நனைத்து என் நாவில் வைத்துச் சுவை பார்த்தேன். அப்பப்பா, குடலை குமட்டிக் கொண்டு வரும் அருவெறுப்பான சுவையது. நான்கைந்து நிமிடத்தில் என் விரல் வெள்ளை உப்புப் படிந்து காணப்பட்டது.

சாக்கடலுக்குச் சற்றுத் தொலைவில் அமைந்த மலை அடிவாரச் சமவெளி ஒன்றைக் காட்டி "யாக்கூப்!" "சாக்கடல் ஸ்குரோல்" என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? "கும்ரான்" என்ற மடத்தின் பாழடைந்த பகுதி அதோ தெரிகிறதல்லவா? கிறிஸ்து பிறப்புக்கு முன் வேத புத்தகங்களை தோலில் எழுதி, ஜாடிகளில் வைத்துப் பாதுகாத்தனர். 1947 ஆம் ஆண்டில் தற்செயலாக ஒரு அராபியன் ஒருவன் பாழடைந்த குகைகளில் ஒன்றில் கண்டு பிடித்தான். அக்கண்டு பிடிப்பின் காரணமாக வேதாகம நூலின் ஒரிஜனல், அக்கால மக்களின் வாழ்க்கை முறை முதலியவற்றை அறிய வேதாகம வல்லுநருக்குப் பெரிதும் பயன்பட்டது. அந்த இடத்தைப் பார்த்துவிட்டு நேரே ஜெரிக்கோ போவோம்" என்று கூறினான் ஜேம்ஸ்.

பஸ்ஸில் ஏறி அந்த "சாக்கடல் ஸ்குரோல்" கண்டெடுக்கப்பட்ட பகுதியை நோக்கிச் சென்றோம். அப்பகுதியில் காலெடுத்து வைத்ததும் எத்தனையோ ஆயிரக்கணக்

கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நாகரிகத்தில் நுழைவது போலிருந்தது.

வெய்யிலின் கொடுமை எங்களை அப்பகுதியில் வெகு நேரம் தங்கவிடவில்லை. உடனே பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். மதிய உணவை ஜெரிக்கோவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்கனவே ஜேம்ஸ் கூறியிருந்தான்.

கடிகாரத்தைப் பார்த்தேன். மணி 11–30ஐ அடுத்து விட்டது. வெய்யிலின் கொடுமையால் வழக்கத்துக்கு மாறாக 11–30க்கே பசி எடுக்க ஆரம்பித்து விட்டது.

எனவே எல்லாரும் பஸ்ஸில் ஏறியதும் ஜெரிக்கோவை நோக்கி எங்கள் பஸ் விரைந்தது.

(தொடரும்)


## திருமறை உரையாடல்கள்

கத்தோலிக்க மறை பற்றிய முழு அறிவை அஞ்சல் மூலம் தொடர்ந்து பெற ஆசிப்போர் இன்றே எழுதுங்கள்.......

ஆசிரியரின் புதிய முகவரி :

ஆசிரியர் : **பொய்யா விளக்கு**
புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி
அஞ்சல் எண் 56
மதுரை—1


# பைபிள் கதைகள்

## 10. இறைவன் வழங்குவார்

தன் பெயர் தாங்க மகன் தள்ளாத வயதில் தோன்றினானே என்று மனம் பொங்கி மகிழ்ந்தார் முதியோன் அபிரகாம். மகிழ்ச்சிப் பெருக்கில் கண்ணயர்ந்த அவர் வானத்து விண்மீன்களென தமது குடும்பம் வாழையடி வாழையாகத் தழைக்கும் எனக் கனவு கண்டார். பரந்த கடலின் பரவிய மணலென பாரெங்கும் தம் புதல்வர்கள் வாழ்வார்கள் எனத் துயில் நினைவு கொண்டார். இறைவன் வழங்கிய நற்கொடைக்கு நன்றி கூறுவது போன்று உயர்ந்து இறங்கியது அவர்தம் உயரிய நெஞ்சம்.

காரிருளில் கனவுலகில் மூழ்கிய அவர்முன் சுடரொளி ஒன்று வீசியது. ஒளியின் தேவன் 'அபிரகாம்' என அழைத்தார். "ஆண்டவரே அருகில் உள்ளேன் அடியேன்," என மறுமொழி பகர்ந்தார் அபிரகாம். கூரிய வாளென அறுத்தது அவர்தம் இதயத்தை இறைவனின் கூற்று. "உன் உயிரின் கண்மணியாம் ஈசாக்கை மொரியா மலைக்கு அழைத்துச் செல். ஆங்கு அவனைத் தகனப் பலியாய் எனக்கு அளிக்க வேண்டும்." தன் ஒரே மகனைப் பலி கேட்ட பரமனில் அன்பும் விசுவாசமும் கொண்ட அபிரகாம் மனங் கலங்கினாலும் உறுதி குலையாமல் இறைவனின் விருப்பை நிறைவேற்ற முனைந்தார்.

காலையில் கதிரவன் கண் விழிக்கும் முன்னரே கடமை வீரராய் தன் மகனை எழுப்பி எரியூட்டும் சிதை விறகு

களைக் கழுதைகளில் ஏற்றிக்கொண்டு குறித்த மலைநோக்கி நடந்தார் அபிரகாம். சாராவிற்கு ஒன்றும் விளங்கவில்லை. அவளுக்கு எதையும் விளக்கவும் தயாராக இல்லை அபிரகாம். தந்தையின் கரத்தோடு கைகோர்த்து வியப்போடு வழி நடந்தான் சிறுவன் ஈசாக்கு. மூன்று நாட்கள் நடந்தனர் தந்தையும் மகனும். தன் தந்தையின் உள்ளப் பாங்கறியாது, ஏதோ உல்லாசப் பயணம் போவது போன்று ஆர்வத்துடன் சென்றான் ஈசாக்கு. இறைவன் வழங்கின கொடையை இறைவனிடமே வழங்கப் போகிறோம் என்ற மனத் திண்ணத்துடன் இருந்தார்.

மலையடிவாரம் வந்தது. சிறு விறகைத் தன் மகன் மீது ஏற்றி, தன் கையில் அரிவாளையும், தீக்கலத்தையும் தாங்கி தன் உணர்ச்சிகளையெல்லாம் அடக்கி அமைதியுடன் மலையேறத் தொடங்கினார் அபிரகாம். அருமை மகனின் குரல் அவர்தம் அமைதியைக் குலைத்து உணர்ச்சிகளைப் பொங்க வைத்தது. "அப்பா! தகனப் பலிக்குத் தீக் கலமும் விறகுகளும் உள்ளனவே தவிர பலிப்பொருளாம் ஆட்டினைக் காணோமே! அதனைக் கொண்டு வர மறந்து விட்டீர்களா?" இறைப்பற்றினால் இதயத்தையே பிழிந்த துன்பத்தை மறைத்தார். அவரது பதில் அவர் குணத்தை விளக்கியது. "மகனே! பலிப்பொருளை இறைவன் வழங்குவார்." தன் மகன் ஈசாக்கு தனக்கு இறைவனால் வழங்கப்பட்டவன் என்ற உண்மை அவரது உள்ளத்தில் நிறைந்திருந்தது.

மலையின் சிகரம் வந்தது. இல்லை, அபிரகாம் இறைப்பற்றின் சிகரத்தை அடைந்தார். விசுவாசக் கொடுமுடியில் தன் அன்புக் கொடியைக் கட்டிப் பறக்கவிட முனைந்தார், அப்புனிதனார். சிதையை அடுக்கினார்; சிந்தையை அடக்கினார்; சிறுவனைக் கிடத்தினார்; அவன் சிரத்தினைத் தாழ்த்தினார். ஒரு விநாடி இறைவனிடம் ஒரு மன்றாட்டு. அவரன்பில், அரவணைப்பில், அவர் சொல்லில் தான் என்



றும் வாழ அவரை வேண்டினார். மகனை அளித்ததற்கு நன்றி. மகனைப் பலியாய்க் கேட்டதற்கு ஒப்புமை. அவர் சித்தம் என் பாக்கியம். விநாடி முடிந்தது. கை உயர்ந்தது. அரிவாள் துடித்தது. அந்தோ! என்ன பேரொலி! "அபிரகாம்! அபிரகாம்! உன் அன்பை அறிந்தேன். உன் பண்பு உயர்ந்தது. உன் மகனை அவிழ்த்து விடு," பலியைவிட இதயத்தின் அன்பை விரும்பும் இறைவன் இவ்வாறு பேசினார். தன் அடியான் அபிரகாமின் அன்பில் மகிழ்ந்த இறைவன், "உன் மக்கள், வானத்து மீன்கள் எனவும் கடற்கரை மணலெனவும் பெருகுவார்கள். உன் எதிரிகள் உன்னை வெற்றிகாண முடியாது. உன் பொருட்டு, உன்னில் பிற மக்களும் ஆசீர் பெறுவார்கள்" என ஆசி மொழிந்தார். கட்டுண்ட மகனை அவிழ்த்தார். முட் செடியில் அற்புதமாய் சிக்கியிருந்த செம்மறியாட்டைப் பலியிட்டார். அப்பலியில் மூண்ட புகை விண் நோக்கி எழுந்தது. அத்தோடு அவர்தம் விசுவாசப் புகழ் மண்ணெங்கும் பரவியது.

145372

# சிந்தனைக்கு

## சிந்திக்கும் நாணல்

மனிதனுடைய சிறுமையையும் எளிமையையும் அறிவியல் கற்பித்து விட்டதாகக் கூறினோம். இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புக்களும், புதிய சாதனைகளும் மனிதன் உலகில் பெற்றுள்ள இடத்தை வரையறுத்து விட்டதாகக் கூறினோம். ஆனால் மனிதனுக்கப்பால் அறிவியல் தனித்தியங்க முடியுமா? இந்த அறிவியலுக்கு உயிர் கொடுப்பதும் அதை ஆண்டு நடத்துவதும் மனிதன்தானே? அறிவியலுக்குக் காரணம் மனிதனே. தன் அறிவாலும் ஆற்றலாலும் இவ்வுலகமைப்பின் நுண்மைகளையும் உண்மைகளையும் துருவி ஆய்ந்து அவற்றிற்கு இலக்கணமும் சட்டங்களும் வகுத்திருக்கிறான் மனிதன். எண்ணம் என்ற உளி கொண்டு அறிவியல் என்ற அழகிய சிலை வடிக்க முயன்றுள்ளான்; சில சமயங்களில் தன்னை மறந்து இந்தச் சிலைக்கு முன்னே மண்டியிடுகிறான் மனிதன் என்றாலும் மனிதன் சாய்ந்தால் இந்தச் சிலையும் அழிந்தொழியும். படைப்பில் வேறெந்த விலங்கும் மனிதன் விட்டுச் சென்ற அறிவியல் துறையை முழுமைக்குக் கொண்டுவரப் போவதில்லை. மனிதனை விட பன்மடங்கு பெரிய யானையோ, பன்மடங்கு ஆற்றல் வாய்ந்த சிங்கமோ அல்லது வேறு எந்த விலங்கோ அறிவியலின் முதற் படியைக் கூடத் தொட முடியாது.

ஆம், காலத்தோடும் அண்ட வெளியோடும் மனிதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவனுடைய மூர்த்தி மிகச் சிறியதுதான். ஆனால் அவனுடைய கீர்த்தி, அவனுடைய



கூர்த்த மதி? உடல் சிறிது ஆனால் அவன்தான் அண்டத்தை அளந்து வைத்திருக்கிறான். சில நாள் வாழ்பவன். ஆனால் அவன்தான் இறந்த காலத்தைத் தன்னுள் அடக்கி எதிர் காலத்திற்குத் திட்டம் தீட்டுகிறான். மனிதன் இந்தப் பூமியின் மேல் தோன்றுவதற்கு முன் இயற்கை தன் இயல்பாகச் சென்றது. கண் மூடி நடந்தது. ஆனால் மனிதன் தோன்றியதும் மாற்றம் ஏற்பட்டது; உலகின் நீண்ட பரிணாம வளர்ச்சியின் இறுதிக் கனி அவன்; ஆனால் அவனுடைய ஆற்றல்தான் என்னே! இந்த ஆற்றல் அவனுடைய உடலைப் பெரிதாக்கிவிடவில்லை ஆனால் அவனுக்கு ஆளும் திறமையை அளித்தது. உலகின் இயற்கை நுட்பங்களைக் கண்டு அவற்றை முன்னறிந்து, அடக்கி வகைப்படுத்துகின்றான். தன்னை அழித்து விடாதவாறு மட்டுமல்ல ஆனால் தனக்கு அதிகமாகப் பயன்படும் வகையைக் கண்டு பிடித்துள்ளான்.

ஒரு பக்கம் சிறுமை, எளிமை; மறுபக்கம் ஆற்றல், ஆட்சி; ஆம், இதுதான் மனிதன். அண்டவெளி என்ற பண்பில் உலகு என்னை அடக்கி விழுங்கிவிடும். ஆனால் எண்ணம் என்ற பண்பில் நான் அதை அடக்கிவிடுகின்றேன். மனிதன் ஒரு நாணல், இயற்கையின் எளிய நாணல். ஆனால் சிந்திக்கும் நாணல். மனிதனை அழிக்க உலகம் தன் முழு ஆற்றல்களையும் ஒன்று திரட்ட வேண்டுமென்பதில்லை. சுழன்றடிக்கும் காற்று அல்லது சிறிதளவு நீர்—இவை போதும் அவனை அழித்துவிட. உலகமே அவனை எதிர்த்து அழித்தாலும், அந்த அழிக்கும் சக்தியைவிட உயர்ந்தவன் மனிதன். ஏனென்றால் தான் அழிகின்றான் என்பதை உணர்ந்தவன் மனிதன்; தான் அழிக்கின்றது என்பதை உணராதது உலகு. ஆம், இந்த உணர்வு, இந்த எண்ணம் — இதுதான் மனிதனுடைய மகத்தான செல்வம். சிந்திக்கும் ஆற்றல்— இதுதான் மனிதனுடைய மதிப்பின் அடித்தளம். முறையாகச் சிந்தித்தல் — இதுதான் மனித முன்னேற்றத்தின் முதற்படி.

சிந்தனை என்றதும் ஒரு சிலருக்கே உரிய தனிச் சொத்து என்று தவறாக எண்ணுகின்றனர் சிலர். நம்மை வியப்பில் ஆழ்த்தும் அளவிற்குச் சிந்தனைச் சிற்பிகள் உலகில் தோன்றியுள்ளனர் என்பது உண்மைதான். ஆனால் நலமான எந்த மனிதனுக்கும்— அவன் கற்றவனோ அல்லது கல்லாதவனோ— சிந்திக்கும் உரிமை உளது. சிந்தனை, அறிவு, எண்ணம்— இவற்றை நாம் பயன்படுத்துவதில் தான் நம் வாழ்க்கை விலங்கு வாழ்க்கையினின்று வேறுபடுகின்றது. ஒரு நகைச்சுவையை ரசிப்பது, ஒரு நூலைப் படிப்பது, நாணயங்களை எண்ணுவது, சமைப்பது, விளையாடுவது— ஆம், இவை நம் அன்றாட அலுவல்கள். மிகச் சாதாரண காரியங்கள் என்றாலும் இவற்றால் நம் உலகம் மனித உலகமாக நிலைத்திருக்கின்றது. எங்கு எண்ணம் ஆட்சி செய்கிறதோ அங்கு மனித உலகம் பரிணமித்து விடுகிறது.

அண்ட உலகில் மனிதன் ஒரு மகத்தான இடத்தைப் பெற்றுள்ளான் என்ற கருத்தை எல்லாச் சமயங்களும் ஓரளவு உணர்ந்திருக்கின்றன எனலாம். இறைவன் படைப்பில் மனிதன் சிகரமாக விளங்குவதைப் பல புராணங்களும் கதைகளும் அழகாக ஆனால் ஆழமாக விளக்குகின்றன. உலகின் இருப்பனவற்றிற்குப் பொருளும் அழகும் கூட்டுபவன் மனிதனே.

“கடவுள் ஐம்பூதங்களையும், கதிரவன், நிலவு, வெளி, சாவு முதலியவற்றையும் படைத்தார். உலகை ஆளப் பிறந்த இவை என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தன. ஒரு பெருங்கடலில் விழுந்து அழியத் தொடங்கின. உடனே படைத்தவரை அழைத்து ‘ஆண்டவா, எங்களைத் தாங்கவல்ல ஒரு பொருளை அனுப்பும்! அதில் நாங்கள் இருப்புக் கொண்டு வாழ்வோம்’ என்றன. கடவுள் ஒரு பசுவைக் கொண்டு வந்தார். ‘இது உதவாது’ என்று அவை கூறின; ஒரு



குதிரையைக் கொண்டுவந்தார். ‘இதுவும் உதவாது’ என்றன. பின், கடவுள் ஒரு மனிதனைக் கொண்டு வந்தார். உடனே அவை ‘ஆம், இதுதான் சரி’ என்று வியந்து கூறின. ‘உங்கள் ஆற்றலுக்கு ஏற்ப அவனுள் நுழையலாம்’ என்று படைத்தவர் அவற்றிடம் கூறினார். உடனே நெருப்பு பேச்சாக மாறி மனிதனுடைய வாயில் புகுந்தது; காற்று மூச்சாக மாறி அவன் நாசியில் நுழைந்தது; கதிரவன் பார்வையாகமாறி அவன் கண்களில் குடியேறியது; வெளி கேள்வியாக மாறி அவன் செவிகளில் புகுந்தது: செடிகளும், மரங்களும் உரோமமாக மாறி அவன் தோலில் குடியேறின; நிலவு அவன் மனதாக மாறி நெஞ்சத்தில் மஞ்சம் கொண்டது; சாவு கீழ்நோக்கிச் செல்லும் மூச்சாகமாறி அவன் நாடியில் நிறைந்தது.” இங்ஙனம் அயித்தரேய உபநிடதம் ஒரு கதையாக விளக்குகின்றது. உலகம் பசியினின்றும் இறப்பினின்றும் மனிதனால் மீட்கப்பட்டது. இறைவனின் ஒப்பற்ற கலைப் பொருளாகவே மனிதனைக் காட்டுகிறது இவ்வுபநிடதம். மனிதனிலும் மனிதன் வழியாகவும் படைப்பனைத்தும் பொருளும் நிறைவும் கொள்ளுகின்றன.

இதே கருத்தை விவிலியத்தின் முதல் நூலாகிய ஆதிஆகமத்தில் விளக்கமாகப் பார்க்கிறோம். பிறவற்றையெல்லாம் படைத்து முடித்த நிலையில் இறைவன் மனிதனைப் படைக்கிறார் :

“பின்னும் கடவுள்: பூமியானது சாதி சாதியான சீவ சந்துக்களையும், வீட்டு மிருகங்களையும், ஊர்வனவற்றையும் இனமினமான காட்டு மிருகங்களையும் பிறப்பிக்கக் கடவது, என்றார். எனவே அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் சாதி சாதியாக காட்டு மிருகங்களையும், வீட்டு மிருகங்களையும் தங்கள் தங்கள் வகைவிதமாய் பூமியில் ஊர்வன யாவற்றையும் படைத்தார். கடவுள் இதுவும் நல்லதென்று கண்டார். பின்னும் நம்

முடைய சாயலாகவும் பாவனையாகவும் மனிதனை படைப்போமாக, அவன் சமுத்திர மச்சங்களையும் ஆகாயப் பறவைகளையும் மிருகங்களையும் பூவுலகனைத்தையும் பூமியில் அசைவாடும் ஊர்வனயாவற்றையும் ஆளக்கடவான் என்றார். அவ்வாறு கடவுள் மனிதனை தம்முடைய சாயலாகப் படைத்தார். தேவ சாயலாகவே அவனை சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பிற்பாடு கடவுள் அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் பெருகிப் பலுகிப் பூமியில் நிறைந்து அதனைக் கீழ்படுத்திச் சமுத்திர மச்சங்களையும் ஆகாயப் பறவைகளையும் பூமியின்மேல் அசைவாகிற எல்லா சீவப் பிராணிகளையும் ஆண்டு கொள்ளுங்கள், என்றருளினார். பின்னையுங் கடவுள்: இதோ பூமியில் தருஞ் சகலமான புற்பூண்டுகளையும் தங்கள் தங்கள் சாதியின்படி தங்கள் தங்களில் விதைகொண்டிருக்கின்ற நானாவித மரங்களையும் உங்களுக்கு உணவாயிருக்கும்படி அளித்தோம். மேலும் சீவப் பிராணனுள்ள பூமியின் சமஸ்த மிருகங்களுக்கும் ஆகாயத்திலுலாவும் எல்லாப் பறவைகளுக்கும் பூமியில் அசையும் சீவ ஆவியைக் கொண்டிருக்கின்ற எல்லாவற்றிற்கும் மேற்சொல்லிய புற்பூண்டுகளை ஆகாரமாகக் கொடுத்தோம் என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் தாம் படைத்த யாவற்றையும் நோக்கினார். அதோ எல்லாம் மெத்தவும் நன்றாயிருந்தன. மாலையும் காலையும் சேர்ந்து ஆறுநாள் ஆயிற்று.'' (ஆதியாகமம். 1/24-31)

**ரஷ்யத் தொடர்கதை**

# பரதேசியின் பயணம்

(முன் இதழ் தொடர்ச்சி)

சிந்தித்தேன், வாசித்தேன்; அந்தப் பெரியவரின் சொற்கள் எனக்குப் புரியவில்லை என்றாலும் அவற்றையே நினைத்துக்கொண்டிருந்தேன்; அவற்றின் உட்பொருளை உணரப் பெரிதும் விரும்பினேன். இதனால் இரவில் தூக்கம்கூட வரவில்லை.

பின்னர் என் பயணத்தைத் தொடங்கினேன். இருநூறு பர்லாங் நடந்திருப்பேன். ஒரு மாவட்டத் தலைநகர் வந்தது; அது ஒரு பெரிய ஊர். ஊர்ச்சத்திரத்தை அடைந்து இளைப்பாறினேன். அவ்வூரில் ஒரு பெரிய துறவறச்சாலை இருந்தது. அம்மடத்தின் தலைவரான துறவி மிகுந்த அன்புடையவர் என்றும் இறைப்பற்றும் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறமும் மிகுந்தவர் என்றும் கேள்விப்பட்டேன். அவரைப் பார்க்கச் சென்றபோது அவர் என்னை வரவேற்று அமரச் சொன்னார், சிற்றுண்டியும் பரிமாறினார்.

'தந்தையே, எனக்கு உணவு தேவையில்லை, ஆனால் ஆன்ம காரியங்களில் எனக்கு அறிவொளி காட்டும். நாடு வீடு பெற என்ன செய்ய வேண்டும்?'

'வீடு பெற என்ன செய்ய வேண்டும்? நல்லது. கற்பனைகளையும் அறங்களையும் கடைப்பிடித்து வாழ். செபம் செய், நீ வீடு பெறுவாய்', என்றார் துறவியார்.

'தந்தையே நாம் இடைவிடாது செபிக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் பணித்திருக்கிறாரே அது எப்படி முடியும்? இதன் முழுப்பொருள் எனக்கு விளங்க

வில்லையே. தந்தாய் இடையறாது செபிக்கும் வரத்தை எனக்குக் கற்பித்தருளும்' என்று கெஞ்சினேன்.

'அருமைச் சகோதரா, உனக்கு இதை எங்ஙனம் கற்பிப்பது என்று விளங்கவில்லையே. என்னிடம் ஒரு சிறு நூல் உள்ளது அதைப் படித்துப்பார்' என்று சொல்லி, 'பக்தனுக்கு ஞானக்கல்வி' என்ற நூலை அளித்தார். 'இதோ இதை வாசித்துப்பார்' என்று ஒரு பக்கத்தைக் காட்டினார்.

"'இடையறாது செபிக்க வேண்டும்' என்ற அப்போஸ்தலரின் சொற்களுக்கு மனத்தால் செபிக்க வேண்டும் என்பது பொருள். உள்ளம்தான் கடவுளைத் தேடிச் சென்று எப்பொழுதும் அவரது இணையடி நிழலில் செபித்து இளைப்பாற முடியும்" என்று எழுதியிருந்தது.

'ஆனால் எப்படி உள்ளம் எப்பொழுதும் கடவுள் பக்கமே திரும்பியிருக்க முடியும்? ஐம்புலனால் தொல்லைப் படாமல் செபத்தில் இடையறாது ஈடுபட்டிருக்க முடியுமா? இதன் வழிவகை என்ன?' என்று கேட்டேன்.

'இது உண்மையில் மிகவும் கடினமான காரியம். இறைவனே உனக்கு அருள் ஒளி கூட்டினால் ஒழிய உன்னால் இதைப் பெற இயலாது' என்று சொல்லி அதற்கு மேல் பேசாமல் இருந்துவிட்டார் அந்தத் துறவி.

அந்தத் துறவறச்சாலையில் இரவைக் கழித்தேன். மறு நாள் காலை தலைமைத் துறவியைக் கண்டு அவருடைய விருந்தோம்பலுக்குப் பெருநன்றி தெரிவித்துவிட்டுப் புறப்பட்டேன். எங்குச் செல்கின்றேன் என்று எனக்கே தெரியவில்லை. உள்ளமோ அறியாமைச் சுமையால் அழுந்தியது. எனவே ஆறுதல் பெற என் விவிலிய ஏட்டைப் புரட்டினேன்.



இங்ஙனம் நெடுஞ்சாலை வழியாக ஐந்து நாள் நடந்து கொண்டிருந்தேன். ஐந்தாம் நாள் மாலையில் ஒரு பெரியவர் என்னோடு வந்து சேர்ந்தார். அவரும் ஒரு துறவி என்பதைப் புரிந்து கொண்டேன். இதைப்பற்றி கேட்டபோது தாம் ஒரு துறவி என்றும் பெரு வழியிலிருந்து பத்து பர்லாங்கில் அவரது அறச்சாலை இருக்கிறது என்றும் கூறி, வரவேண்டும் என்று என்னையும் வரவேற்றார். 'எங்கள் விருந்தகத்தில் திருப்பயணிகளுக்கும் அறவோருக்கும் உணவும் இளைப்பாற இடமும் உவந்தளிக்கிறோம். நீரும் வரவேண்டும்' என்றார். என் உள்ள அமைதிக்கு இளைப்பாற்றியும் இருக்கையும் தேவையில்லை. ஆனால் ஞான நல்லறிவே தேவை என்று கூறி அவருடைய அழைப்பை ஏற்க மறுத்து விட்டான். உணவைப்பற்றி நான் கவலைப் படவில்லை ஏனென்றால் என் சாக்குப்பையில் இன்னும் சில காய்ந்த வரகு உரொட்டிகள் இருந்தன.

'நீ தேடும் ஞான நல்லறிவு என்ன? உன் உள்ளத்தை அழுத்தும் சுமை என்ன? அன்புச் சகோதரா, மாலை மங்கிவிட்டது, எங்கள் இல்லத்தில் சிறிது இளைப்பாற வா. எங்கள் இல்லத்தில் பழுத்த நல்லறவோர் பலர் இருக்கின்றனர். புனிதர்களின் போதகத்திலும் இறை வார்த்தையிலும் ஊறித் திளைத்த அறிஞர் இருக்கின்றனர். உனக்கு அறிவூட்டுவர்,' என்று சொல்லி என்னை அழைத்தார்.

என் உள்ளத்தை திறந்து என் சுமையை இறக்கினேன். அந்தப் பெரியவர் தம்மேல் சிலுவை வரைந்து கொண்டு என் அருமைச் சகோதரா, ஆண்டவனுக்கு நன்றி கூறு. அயராது ஆழ்ந்து செபிக்க உனக்கு இத்தகைய பேராவலைத் தந்திருக்கிறார் கடவுள். உன் உள்ளத்தைக் கிளறியது நம் ஆண்டவரின் இனிய குரல்தான் என்றும் இதுவரை உன் வாழ்க்கையில் நடந்தனவெல்லாம் உன் உள்ள உறுதியைச் சோதிக்கவே என்றும் உணர்ந்துகொள்.

உலக ஞானத்திலோ, அழிந்தொழியும் உலக அறிவைத் தேடுவதிலோ நீ விருப்புக் கொள்ளாமல் இறைவனோடு இடைவிடாது உறவு கொள்ளும் எளிய மனதைத் தேடி அலைகிறாய். என்ன பேறுபெற்றவன் நீ!

எளிய மனம், ஏழை வாழ்வு, நல்ல அனுபவம் இவற்றால்தான் உன் ஆவலை நிறைவேற்ற முடியும். எனவே இதுநாள்வரை நீ செபிக்கும் வகையைக் கற்றுக் கொள்ளாததில் வியப்பில்லை. செபம் என்பது என்ன? எங்ஙனம் ஒருவன் இதில் வெற்றிகொள்ள முடியும்? இத்தகைய கேள்விகள் மிகவும் முக்கியமான, அடிப்படையான கேள்விகள் என்றாலும் இவற்றிற்குரிய பதிலை நாம் எளிதில் பெற முடியவில்லை. காரணம் என்ன? இவற்றிற்குப் பதில் அளிக்கக் கல்விக் கூடங்களின் அறிவு போதாது, ஞானக் கண் கொண்டு பெற்ற நல்லறிவு தேவை. ஆம், எத்தனை பேர் கடவுளை அளவு கோல் கொண்டு வரையறுத்து எல்லை கட்டிவிட முயல்கின்றனர். தெளிந்த அறிவில்லாமல் ஞானக் கல்வி புகட்ட வருகின்றனர். பேரமும் சாதனைகளும் செபத்திற்குத் தேவை என்கின்றனர் சிலர். ஆனால் உண்மையில் செப வாழ்வுதான் பேரற வாழ்விற்குக் காரணம். நற்செயல்களுக்கு ஊற்று. எனவே அடிக்கடி செபிக்க வேண்டும். அயராது செபிக்க வேண்டும்.

இங்ஙனம் அவர் பேசி முடிப்பதற்கும் ஆறவறச் சாலையை அடைவதற்கும் சரியாய் இருந்தது.

(வளரும்)

---



# வியட்நாம் வீடு

வியட்நாம் வீடு புகுந்தேன். அடேயப்பா! என்ன சிரமம்! வீட்டின் அழகினைப் பல கோணங்களில் இருந்து ரசித்தேன். இப்பெருமனை கலைக்கோயிலாக இல்லாதது கருத்துக் கட்டிடமாக அமைந்துள்ளது. தேவையற்ற கவர்ச்சியை, பொருத்தம் இல்லாத வகையில், வீட்டின் சிறப்பினைக் குறைக்கும் வகையில் பல இடங்களில் புகுத்தியுள்ளார்கள். விளக்கமாக வரைகின்றேன்.

வீட்டின் உறுதி வாய்ந்த அடிக்கல்லாய் அமைந்துள்ளார், சிவாஜி. வீட்டிற்கு உணர்வூட்டும் உயிர்நாடி இவர். தனது பகுதியைச் சிறப்பாக ஏற்றிருக்கிறார். தந்தையின் கண்டிப்பு, தளர்ந்த கணவனின் முதிர்ந்த அன்பு, அலுவலகக் கண்ணியம் போன்றவைகளை நல்ல முறையில் காட்டியுள்ளார். ஆனால் அவரது பிரஸ்டீஜ் நாடகப் பாணியில் அதிக வசனம் பேசாமல் ஓய்வு பெறும் அதிகாரியின் அமைதித் தோற்றத்தைக் காட்டியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! மேலும் உரத்த குரலில் இரைந்து பேசுவதும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முறையில் வாழ்ந்து வந்த பிரஸ்டீஜ் பத்மனாபனின் பாத்திரத்துக்கு உகந்த முறையில் இல்லை. அடுத்து, வீட்டின் திலகமாய் அமைந்துள்ளார் பத்மினி. வீட்டினைத் தாங்கி நிற்கும் நடுத்தூண் இவர். தாயின் பொறுப்பினைத் திறம்படச் செய்கின்றார். தன் கணவனையே கண்டிக்கும் பொழுதும், தன் குழந்தைகளின் குணத்திற்கேற்ப நடந்து கொள்ளும் பொழுதும் மிகவும் இயற்கையாக நடித்துள்ளார். மற்ற சிறு தூண்களாய் அமைந்துள்ள மற்ற பாத்திரங்கள் அவ்வளவு எடுப்பாக அமையவில்லை. ஏதோ நாகேஷ் ஓரிரு முறை இக்கால மாணவன் போன்று வேடமிட்டுத் தோன்றுகிறார். ஆனால் அதனை முழுவதும்

நம்ப முடியவில்லை. டாக்டர் பீட்டரின் பாகம் சற்று விசித்திரமாக உள்ளது. கிறிஸ்துவக் குருவானவரைப் போன்று உடையணிந்துள்ள அவர் மக்களுக்கு ஆறுதல் கூறும் பணியோடு, மருத்துவப் பணியையும் மேற்கொண்டுள்ளார். வழக்கமாக கிறிஸ்துவக் குருக்கள் மருத்துவ மனைகளை நடத்தலாம், ஆனால் மருத்துவர்களாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் அன்புப் பணியில் பிறருக்காக உருகி ஒளி வீசும் மெழுகுவர்த்தி போன்றது அவர்தம் வாழ்வு. இதனை அவர் பத்மனாபனுக்கு அன்பளிப்பாகத் தரும் மெழுகுவர்த்திகளே நமக்கு உணர்த்துகின்றன. 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' என்ற பாடல் உள்ளத்தில் நல்ல உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. 'பாலக்காட்டுப் பக்கத்தில்' என்றப் பாடல் கேட்கும் முறையில் உள்ளது.

அழகாக அமைந்துள்ள வியட்நாம் வீட்டிலுள்ள குறைபாடுகள் இவை: கண்ணியம் நிறைந்த பத்மனாபனின் கட்டிடத்தில் கடற்கரை கேளிக்கை எதற்கு? குடும்பத்தில் உள்ள இளைஞர்களைத் திருத்த முனைந்துள்ள இவ் வீட்டில் 'மைலேடி' என்ற பாட்டு நல் ஒழுக்கத்தை உடைக்கும் முதல் சிறல். அடுத்து சமுதாயத்தைச் சீர் திருத்தும் முறையில், சாட்டையடி வசனங்கள் அமைந்திருந்தாலும், மனத்தை மேல் நோக்கி ஈர்ப்பனவாக இல்லை. மருத்துவ மனை செல்லும் முன் பத்மனாபன் கூறும் வார்த்தைகள் உலகத்தையே வெறுக்க வைக்கும் பேச்சு, வியட்நாம் வீட்டையும் வெறுக்க வைக்கும் வகையில் இல்லை. ஆங்கிலத்தில் 'cynical' என்று இதனைக் கூறுவார்கள். இதனைச் சற்றுக் குறைத்திருக்க வேண்டும். ஈட்டிக்காரன்-தங்கவேலு—நாகேஷ் தமாஷா வேதனையாக உள்ளது. பத்மனாபன் இறக்கும் முன்னால் தன் அன்னையின் படம் முன் வசனம் பேசாது, தனது உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளையெல்லாம் முக பாவனையில் காட்டி இருந்திருந்தால், வெகுச் சிறப்பாய் இருந்திருக்கும். அடுத்து ஒளிப்பதிவு உள்ளப்பாங்கினை வெளிப்படுத்தும் வகையில்



அமையவில்லை. ஏதோ ஒரு வகையாக உள்ளது. அது போன்று படத்தொகுப்பும் அவ்வளவு சிறப்பாயிருக்கிறது என்று கூறி விட முடியாது.

வியட்நாம் வீடு ஒரு சிறந்த கட்டிடம். ஆனால் இக் கட்டிடத்தில் தேவையில்லாத, அழகினைக் குறைக்கும் பகுதிகள் உள. நல்ல பகுதிகளிலும் கூட பிறர் கண் வைத்து விடுவார்களே என பயந்தோ என்னவோ சில தவறுகள் உள. கண்டதும் காதல், எதிர்பாராத வில்லன், போராட்டம், காதலில் வெற்றி என்ற முறையில் எழும்பியுள்ள நூற்றுக்கணக்கான வீடுகளின் நடுவே வியட்நாம் வீடு ஓர் உயர்ந்த வீடு. சிறந்த வீடாகவும் இருந்திருக்கலாம்.

இத்திரைப்படத்தின் பெரும் உட்கருவும் இன்றைய அரசியல் சதுரங்க விளையாட்டின் சொக்கட்டானாக பிளவு பட்டு அல்லல்படும் வியட்நாம் நாட்டைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளது.

வியட்நாம் நாட்டில் நடைபெறும் அரசியல் சூழ்ச்சியை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அதில் பிரதிபலிப்பது ஒரு நாட்டின் பிரச்சினை அல்ல, ஒரு நாட்டின் வேதனை அல்ல; வியட்நாமில் பிரதிபலிக்கப்படுவது உலகப் பிரச்சினை; வியட்நாமில் பிரதிபலிக்கப்படுவது உலக நாடுகளின் வேதனை... இங்குள்ளது வெறும் அரசியல் பிரச்சினை மட்டுமல்ல; அதைவிட முக்கியமானது மனித ஆன்மப் பிரச்சினை...

எப்போது மனிதன் உரிமைகளையும் கடமைகளையும் கொண்ட ஒரு ஆள், ஆன்மாவுடன் கூடிய ஒரு கூட்டுப் பொருள் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றோமோ அப்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எளிது... ஆனால் மனிதன் உரிமைகளைக் கொண்டவன். அரசாங்கம்

கூட மறுக்க முடியாத உரிமைகளைக் கொண்டவன், அழியா ஆன்மாவைக் கொண்டவன் என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அப்போது பிரச்சினைக்குத் தீர்வு காணும் அடிப்படையே போய் விடுகின்றது. அடிப்படை நிலை, அடிப்படை மனப்பான்மை மாறினால் ஒழிய வியட்நாம் பிரச்சினை என்றும் தீராது... உலகத்தின் பலபாகங்களிலேயும் வியட்நாம்கள் தோன்றிக் கொண்டே இருக்கும்.

வியட்நாம் பிரச்சினை இன்று தலை தூக்கி நிற்கலாம். ஆனால் என்று அது தொடங்கியது?

ஒரு தாய் மக்கள் நாம் என்போம், என்று சொல்லிக் கொண்டு வியட்நாம் மக்கள் ஒற்றுமையாய் வாழ்ந்த காலம் உண்டு... பின்பு பிரான்சு நாட்டின் ஆட்சிக்கு உள்ளாகியது... ஆடு நனைகிறதே என்று வருந்தியதாம் ஒரு ஓநாய்! ஆட்டுக்கு விடுதலை கொண்டு வருவதாகச் சொல்லி நுழைந்த கம்யூனிச ஓநாய் குடும்பத்தை இரண்டாக்கியது... அதன் முதல் புனித கைங்கரியம்! ஒரு பகுதியை தன் முழு ஆதிக்கத்திற்கு உள்ளாக்கி வட வியட்நாமில் மரண அமைதியை நிலவச் செய்துள்ளது! அது போதாதென்று தென் வியட்நாமையும் தன் ஆதிக்கத்திற்கு உள்ளாக்கப் போராடுகின்றது... தென் வியட்நாம் தான் மதிக்கும் சுதந்திரத்திற்காகவும், தன் சுதந்திரத்திற்காகவும் உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கின்றது...வட வியட்நாமில் மரண அமைதியை நிலவச் செய்தது போல் தென் வியட்நாமிலேயும் "அமைதியை" நிலவச் செய்யத் தடங்கல் செய்கிறார்களே என்று கம்மிகளும், அவர்களுடைய சகாக்களும் ஓரே கூச்சல் போடுகிறார்கள்...நல்ல காலம் வெளியே தான் இருக்கின்றார்கள்...கம்மிகள் நாட்டுக்குள் சென்றால் கூச்சல் எங்கே போடமுடியும்?




வியட்நாம் குடும்பம் கலைவதற்குக் காரணம் அன்பு இன்மை. இணைக்கும் அன்பு அகற்றப்பட்டது; பிரிக்கும் பகை புகுத்தப்பட்டது. தீர்வு காண வழி என்ன? புகுத்தப்பட்ட பகை விரட்டப்படல் வேண்டும்; விரட்டப்பட்ட அன்பு திரும்பவும் புகுத்தப்படல் வேண்டும்... கம்மிகள் இதற்கு உடன்படுவார்களா? இதுவரைக்கும் எங்கேயாவது உடன்பட்டிருக்கிறார்களா? திடீரென்று புலி தன் வரிகளை போக்கிக் கொள்ளவா போகின்றது?

பிரெஸ்டிஜ் பத்மநாபன் விளையாட்டாக தம் வீட்டிற்கு வியட்நாம் வீடு என்றழைக்கிறார். வீட்டில் ரகளைகளுக்கு குறைவில்லை. ஆனால் பத்மநாபனின் கௌரவமானது, நேர்மையானது, கண்டிப்பானது, குடும்பத்தை இணைத்துக் காப்பாற்றுகின்றது. அமிர்தத்தில் விஷம் போல் இக் குடும்பத்தினுள் நுழைகின்றது ...காய்மகாரம், ஒழுக்கமின்மை, லஞ்சம், முடிவு? வியட்நாமைப் போல பத்மநாபனின் குடும்பம் சிதறிப்போகின்றது. நல்லகாலம் அவர்களின் கண்கள் திறக்கப்படுகின்றன. குற்றத்தை உணருகிறார்கள். திரும்பவும் குடும்பத்தில் அன்பு ஓங்கத் தொடங்குகின்றது; குடும்பம் ஒன்று படுகின்றது.

வியட்நாமுக்கு வேண்டிய மருந்து துப்பாக்கிகள் அல்ல; தெய்வீக அன்பு. உங்கள் எதிரிகளை மன்னியுங்கள்; உங்களுக்குத் தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என்றார் கிறிஸ்து பெருமான். அதைச் செய்யும் வீரம் என்று நமக்கு இருக்கின்றதோ அன்றுதான் நமது மத்தியிலுள்ள வியட்நாம் பிரச்சினைகள் தீரும்.

JL 145372

Regd. No. M. 6743



முதல் பதிப்பு : 13000. ஜூன் 1970

CUM PERMISSU SUPERIORUM


Imprimatur : ✠ P. Justin Diraviam, *Archbishop of Madurai*

Edited by Rev. Fr. M. Asirvatham, S.J.,
St. Mary's, P. B. No. 56, Madurai—1

Printed and Published by Rev. Fr. S. M. Selvaraj,
Manager, De Nobili Press, Madurai—1



# கிறிஸ்துவைப் பற்றி



# ன்ன நினைக்கிறீர்கள் ?

பொய்யா விளக்கு துணை வெளியீடு — ஜூன், 1970

# பொய்யா விளக்கு

## வெளியீடுகள்

—○—

1. திருமறை உரையாடல்கள்...... கத்தோலிக்க மறை பற்றிய முழு விளக்கம் (நூல் வடிவில்) பக்கம் 3 + 396... விலை ரூ. 2-50
2. ஒளிப்பாதை... விலை 45 காசுகள்
3. வாழ்க்கைப் படகினிலே... விலை 75 காசுகள்
4. உள் ஒளி... விலை 25 காசுகள்
5. பத்துக்காசுப் பதிப்புக்கள்
   (a) நிகரில்லா நித்தியன்
   (b) கடவுளா கசடரா?
   (c) கிறிஸ்துவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இன்னும் பல...

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம்:

**பொய்யா விளக்கு**
புனித மரியன்னைப் பள்ளி
த. பெ. 56, மதுரை-1


### கிறிஸ்துவைப் பற்றி

# என்ன நினைக்கிறீர்கள்?

அன்பு கெழுமிய நண்ப,

"கிறிஸ்து இந்தியாவுக்கு வருகை தந்தாரா?" என்று வினா எழுப்பிற்று பிளிட்ஸ் (Blitz). "சேசு பிரான் ஒரு இந்தியரா?" என்று கேள்வி எழுப்பியது மற்றொரு இதழ். "கிறிஸ்துபிரான் திருமணமானவரா?" என்ற வினாவை எழுப்பியது இன்னுமொரு வார இதழ். இங்ஙனம் கிறிஸ்துவைப் பற்றிய பிரச்சினை புத்துயிர் கொடுக்கப்பட்டு, இதழ்களில் அலைக்கழிக்கப்பட்டது. இவைகளை வாசித்த கத்தோலிக்கர் அல்லாத நண்பர்களுக்கு இப்பொருள்பற்றி விரிவாக எழுத இது தக்க தருணம் என்று கருதுகின்றோம். சென்ற திங்கள் கிறிஸ்து பிரானின் உயிர்த்த விழாவைக் கொண்டாடினோம்.

கிறிஸ்துவின் மீது குறைகூறும் சிலர் அவரைக் கேலி செய்யும் நோக்கத்துடன் அவரை சித்திரித்துக் காண்பிக்கின்றனர். வேறு சில இதழ்கள் வாணிப நோக்குடன், பரபரப்பூட்டக் கூடிய முறையில் கிறிஸ்துவைப் பற்றித் திரித்து எழுதுகின்றன. எத்தனை பேர், எவ்வளவு விசித்திரமான விதத்தில் கிறிஸ்துவைக் கற்பனை செய்து எழுதி உள்ளனர்! இதற்கு மாறாக வரலாற்றில், நற்செய்தி நூல்களில், காட்சியளிக்கும் கிறிஸ்து எளிமையுடன், பெருமையுடன், எல்லோரையும் எழுப்பக்கூடியவராய், காட்சியளிக்கின்றார். அதே தருணம் அவரை எதிர்த்து நிற்கும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து சவால் விடும் வினாவைக் கேட்கின்றார்; நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

## கிறிஸ்து இந்தியாவுக்கு வருகை தந்தாரா?

இத் தலைப்பைக் கொண்ட கட்டுரை பம்பாய் வார இதழ் ஒன்றில் வெளியாயிற்று. அதை எழுதியவர் பாக்கிஸ்தான் சர். முகமது சபருல்லாக்கான். இவர் பெரிய

அறிஞர்தாம்! ஒரு காலம் அனைத்து நாட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர். கிறிஸ்து சிலுவையில் மரித்தார், கல்லறையிலிருந்து உயிர்த்தார், மோட்சத்திற்கு ஆரோகணம் ஆனார் (ஏறிச் சென்றார்) என்று இதுவரை தலைமுறை தலைமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை இவர் மறுத்தார். "சேசு சிலுவையில் மரிக்கவில்லை; ஆனால் பின்பு காசுமீருக்கு வந்து, ஸ்ரீநகரில் (Srinagar) அடக்கம் செய்யப்பட்டார்," என்பது அவரது கருத்து. (Blitz, 23 டிசம்பர், 1968).

இக் கட்டுரைக்கு ஆதாரமாக எடுத்தாளப்படுபவர்கள் வேதாகம ஆழ்ந்த அறிவு கொண்டவர்களா என்பது சந்தேகமாயுள்ளது; ஆனால் விளம்பரத்திற்கு அவர்கள் பெயர் பயன் படுத்தப்பட்டுள்ளது. அவர்களை மேற்கோளாகக்கொண்டு கட்டுரை தொடர்ந்து சொல்லுவதாவது: "கிறிஸ்து தமது தந்தையின் வீட்டை விட்டு விலகிய 12-வது வயதிலிருந்து தமது முதல் அறவுரை மொழிந்த 30-வது வயதுவரை என்ன செய்தார் என்று கூற ஆதாரம் ஒன்றும் எழுத்தில் இல்லை என்று தர்க்கிக்கப்பட்டது........." "கிறிஸ்து எருசலேமை விட்டு வந்த பிறகு, சிந்து நோக்கிப் பிரயாணம் செய்து, இந்தியாவில் ஏறக்குறைய 16 ஆண்டுகள் தங்கி இருந்ததாகப்... பின்பு பாரசீகம், வழியாக எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார் என்றும் கூறப்படுகின்றது." (Blitz. 23, டிசம்பர் 1968).

கவனமாக மேற்கூறியவைகளை வாசிக்கும் எவர்க்கும் அதில் உள்ள முரண்பாடு தெளிவாய்த் தோன்றும். முதல் கூற்றில், "கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு இந்தியாவுக்கு வந்தார்" என்று சொல்லப்படுகின்றது. "சேசு சிலுவையில் மரிக்கவில்லை; ஆனால் பிந்தி காசமீருக்கு வந்தார்..." இரண்டாவது கொடுக்கப்பட்ட மேற்கோளில், கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு 12 வயதிலிருந்து 30 வயதிற்குள், இந்தியாவுக்கு வந்தார் என்று கூறுவது புலனாகின்றது.

145 372



**மரித்தோரிடையே உயிருடன்:**

தனது கூற்றுக்கு ஆதாரமாக சர். முகமது சபருல்லாக்கான், ஸ்ரீநகரிலுள்ள யுஸ் அசாப் (Yuz Asaf) என்ற கல்லறையைச் சுட்டிக் காட்டுகின்றார். கிறிஸ்து உண்மையிலேயே அடக்கம் செய்யப்பட்டது இங்கேதான் என்று அகமைதியா (Ahmaidiyya) அல்லது காடியானி ஸ்தாபனத்தின் (qadiani movement) ஸ்தாபகரான ஹசராட் மிர்சா குலாம் அகமது (Hazrat Mirza Ghulam Ahmed) ஊர்ஜிதம் செய்ததாகவும் கூறப்படுகின்றது. சர். முகமது சபருல்லாக்கானும் காடியானி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவரே. மேலும் காஷ்மீர்ப் பள்ளத்தாக்கிலுள்ள பாரமுல்லா (Baramulla) பன்னிரு முல்லாக்கள், —சேசுவின் அப்போஸ்தலர்களின் - பெயரால் இங்ஙனம் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறுவர். கிறிஸ்துவின் தாயாராகிய மரியம்மாள் ராவல்பிண்டியிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள முரீ (Muree) என்ற இடத்தில் மரணம் அடைந்ததாகக் கூறப்படுகின்றது. "பாதுகாப்புக் கோபுரத்தை (Defence Tower) ஒட்டியுள்ள அவளது கல்லறை இன்னும் மாரியஸ்தான் (Mariasthan) - தாய் மரியாள் துயில் கொள்ளும் இடம் என்று கூறப்படுகின்றது."

வெகு அழகாகப் பின்னி ஜோடிக்கப்பட்ட கதை! ஆதாரமற்ற கதை! அதோடு குறியை இழந்த கதை! உயிர்த்த கிறிஸ்துவைப் பெண்மணிகள் காலியான கல்லறையில் தேடிவரும் போது சம்மனசுக்கள் அவர்களுக்கு அளித்த பதிலை ஈங்கு நாம் ஞாபகமூட்டிக்கொள்ள வேண்டும். "உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன்?" (லூக்காஸ். 24 : 5).

**சேசு ஒரு இந்தியரா?**

மற்றுமொரு இதழின்படி இந்துக்களும் புத்த மதத்தவரும் சேசுவின் மீது தனிப்பட்ட உரிமை கொண்டாடுகின்றார்கள். "திக்கா நிக்யா (The Dhigha Nikya) என்னும் மிகவும் பூர்வீக புத்த நூல், சேசுவை வருங்கால

புத்தராகக் குறிப்பிடுகிறதென்று சொல்லப்படுகின்றது. இதன்படி கௌதமரின் மதம் மறந்துபோன பின்பு யேசு திரும்பவும் மனிதனுக்கு வழியைக் காண்பிப்பார். அவரது பெயர் மெற்றேயா (Metteya) அல்லது (மெசியா.)" அதே போலச் சில இந்து எழுத்தாளர்களும் ஈசோவஸ்யோ உபநிஷதம் (Isovasyopanishad) யேசுவைப் பற்றியது. அவருடைய போதனைகளின் அடிப்படையை ஒரு அளவு பூரணமாகக் குறிப்பிடுகின்றது என்றும் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

தென் இந்தியாவிலிருந்து இன்னும் திடமான அபிப்பிராயங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. மெசியாவான யேசு பிறப்பால் தமிழர் என்றும், போதிக்கும் பணியை மேற்கொண்டு பலஸ்தீனத்திற்குச் சென்றார் என்றும் இந்த எழுத்தாளர்கள் கூறுகின்றார்கள். மேலும் அவருடைய உண்மையான பெயர் கேசவ கிருஷ்ணனும்! அறியாதவர்கள் அப்பெயரை யேசுக் கிறிஸ்து (Jesus Christ) என்று திரித்துக் கூறினராம்! அவருடைய தாயின் பெயர் தமிழ் நாட்டில் மிகவும் பழக்கமாயுள்ள மாரி அம்மா (Mother Mary) வாம்!

## கிறிஸ்துவும் குறை கூறுபவர்களும்:

கிறிஸ்துவைப் பற்றி சமயாசமயம் இத்தகைய கதைகள் வெளிவருவதைப் பற்றியும் சிலர் ஏமாந்து அதை நம்புவதைக் கண்டும் நாம் அதிசயப்படக் கூடாது. அப்போஸ்தலர்கள் காலத்திலேயே கதைகள் பரவி வந்தன; ஆதலால் வரலாற்றில் அவை அப்படியே பரவி இந்நாள் வரை வந்தால் என்ன சொல்லவிருக்கின்றது! கிறிஸ்தவ மறையின் ஆணி வேராகிய கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்ப்பையும் அநேகர் சந்தேகித்து, வினாக்கள் எழுப்பிக் குறை கூறி இருக்கின்றார்கள். கிறிஸ்தவ மறைக்கு அது எவ்வளவு அடிப்படையானது என்பதைப் புனித சின்னப்பர் எடுத்துரைத்துள்ளார். "கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூது உரை பொருளற்றதே. உங்



கள் விசுவாசமும் பொருளற்றதே." (1. கொரிந்தியர் 15 : 14). ஆதலால் கிறிஸ்துவின் மீது குறை கூறியவர்கள், முக்கியமாக பகுத்தறிவாளர்கள் எனப்படுவோர் (Rationalists) கிறிஸ்தவ மறையின் இப்போதனையை மறுக்க, பலப்பல பொருந்தாக் கொள்கைகளை (theories) எடுத்துரைத்தார்கள்.

## 1. கிறிஸ்து உண்மையிலே மரிக்கவில்லை:

கிறிஸ்து உண்மையிலேயே சிலுவையில் மரிக்கவில்லை என்கின்றார். பால் கோட்லாப் (Paul Gottlob) ஆழ்ந்த மூர்ச்சைக்கு ஆளானார். சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, தைலங்களால் பூசப்பட்டபோது, கல்லறையின் குளிர்ச்சியும், தைலங்களின் வாசனையும் அவருக்கு உயிர் ஊட்டின. கல்லறையிலிருந்து வெளியே வந்தார்; தோட்டக்காரன் போல் மாறுவேடம் பூண்டார், தப்பித்தார். சர் முகமது சபருல்லாக்கான், நடந்திருக்கக்கூடாததோடு, நடக்க முடியாததையும் இணைத்து, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு எப்படியோ காசுமீருக்கு நடந்து சென்றார் என்கின்றார்.

நம்பமுடியாத இக்கதைக்கும், நற்செய்தி வரலாற்றில் கூறப்பட்டிருக்கும் எளிய, நேர்மையான விளக்கத்திற்குமுள்ள வேறுபாட்டைப் பாருங்கள்:

"மறுநாள், அதாவது ஆயத்த நாளுக்கு அடுத்த நாள், தலைமைக் குருக்களும் பரிசேயரும் பிலாத்திடம் கூடி வந்து, "ஐயா, அந்த வஞ்சகன் உயிருடன் இருக்கும் பொழுது மூன்று நாளுக்குப் பின் உயிர்த்தெழுவேன்" என்று சொன்னது எங்களுக்கு நினைவிருக்கிறது. ஒருவேளை அவனுடைய சீடர் வந்து அவன் உடலைத் திருடிக்கொண்டு போய்விட்டு, 'இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்' என்று மக்களிடம் சொல்லக்கூடும். அப்பொழுது முந்தின வஞ்சனையை விடப் பிந்தினது மோசமாயிருக்கும். இது நிகழாதபடி, கல்லறையை மூன்றும் நாள் வரை, பத்திரப்படுத்த கட்டளை

யிடும் என்றனர். பிலாத்தோ அவர்களை நோக்கி " உங்களிடம் காவல்காரர் உண்டே, போய் உங்களுக்குத் தெரிந்தபடி பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் " என்றான். அவர்கள் போய், கல்லுக்கு முத்திரையிட்டுக் காவலரை வைத்துக் கல்லறையைப் பத்திரப்படுத்தினர்..."

(மத்தேயு, 27: 62-66)

ஒரு வரலாற்று உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் கோட்லாப், எத்தனை முரண்பாடான—நடக்கக் கூடாதவைகளை உண்மை என நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்! ஓர் உண்மையை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக எண்ணிலாப் பொய்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிறார். கிறிஸ்துவின் திருப்பாடுகள் சமயத்தில் அவர் அனுபவித்த வேதனைகளை வேறு எவரும் அனுபவித்ததுமில்லை; சிலுவையில் அறையப்பட்டவர்கள் உயிருடன் தப்பித்ததுமில்லை வரலாற்றில். கிறிஸ்து உயிர்விடுமுன் அவரைச் சிலுவையிலிருந்து இறக்க விட்டிருப்பார்களா யூதக் குருக்கள்? அவருடைய உயிருக்காகத் துடித்தவர்களல்லவா? உரோமைச் சட்டத்தின்படி சிலுவையில் உயிர்விட்டபின்புதான் உடலைச் சிலுவையிலிருந்து இறக்கவேண்டும். உயிர் போகவில்லை எனில் கணைக்கால்களை முறித்துக் கொல்லவேண்டும் என்பது சட்டம். அதன்படி, கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டவர்களின் கணைக்கால்களை முறித்தார்கள். கிறிஸ்து முன்னமேயே இறந்திருந்ததால் ஒரு வீரன் அவரது விலாவை ஈட்டியால் குத்தினான்...கிறிஸ்துவின் தாயாரும், அவரது சீடர்களும் அவரது உடலை நன்கு தைலத்தால் பூசிக் கல்லறையில் அடக்கம் செய்தார்கள். கிறிஸ்துவை நேசித்தவர்கள், அவரைப் பகைத்தவர்கள், உரோமை அதிகாரிகள் எல்லோரும் தம் கண்ணால் கண்டார்கள். மரித்த கிறிஸ்துவை......அது உண்மையாகாது! பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கோட்லாப், சபருல்லாக்கான் சொல்லியது உண்மையாகிவிட்டது!! புளுகினாலும் பொருந்தப் புளுக வேண்டும் என்பார்கள் !!!



சாட்டையால் அடிபட்டு, முண்முடி சூட்டப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்ட ஒருவர் உயிர்பெற புதிய முறையைக் கண்டுபிடித்தவர் கோட்லாப்! துணிகளால் இறுக்கமாய் சுற்றப்பட்டு, வாசனைத் திரவியங்களால் பூசப்பட்டுக் கல்லறையில் அடைக்கப்பட்டால், இருக்கின்ற கொஞ்சம் உயிரும் போய்விடுமே! கிறிஸ்து அங்கிலையில் உயிர் பெற்றாராம் !!

பாதி உயிர்போன நிலைமையில், கிறிஸ்து முத்திரையிடப்பட்ட கல்லறையை மூடிய பெரிய கல்லை தானாகப் புரட்டிவிட்டு, காவல் செய்துகொண்டிருந்த காவலர்களையும் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துவிட்டாராம்! முழுச் சக்தி உள்ள பலர் செய்யமுடியாததை கிறிஸ்து அங்கிலையில் செய்தார் என்பது நம்பத்தக்கதா?

## 2. ஏமாற்றமா?

கிறிஸ்து உண்மையிலேயே மரித்தார். ஆனால் கல்லறையிலிருந்து உயிர்க்கவில்லை என்கிறார்கள் ரைமாரும் (Reimar) அவரது தோழர்களும். கிறிஸ்து மரித்தவுடன் அவரது சீடர்களுக்கு வீரம் வந்துவிட்டது. நிக்கோதேமுஸ், அரிமத்தியா, ஜோசப் இருவருடன் சேர்ந்து அப்போஸ்தலர்கள் இரவில் சேசுவின் உடலைத் திருடி, மறைத்து வைத்துவிட்டு, மரணத்திலிருந்து கிறிஸ்து உயிர்த்தார் என்ற புரளியை கிளப்பிவிட்டார்கள்.

யூத குருக்கள் பரப்பிய பொருந்தாக் கொள்கையைத் தான் இவர்களும் எடுத்துரைக்கிறார்கள்......கிறிஸ்து உயிர்த்தார் என்ற மறுக்கமுடியாத உண்மையை ஏற்றுக் கொள்ளுவதைக் காட்டிலும், எவ்வளவு அசட்டுத்தனமான விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பது அதிசயமில்லையா?

வேதாகமம் கூறுவது கீழே :

அவர்கள் (கிறிஸ்துவின் கல்லறைக்கு வந்த பெண் மணிகள்) சென்ற பின், இதோ! காவலருள் சிலர் நகருக்குள் வந்து நிகழ்ந்தவை அனைத்தையும் தலைமைக்

குருக்களிடம் அறிவித்தனர். அவர்கள் மூப்பருடன் கூடி ஆலோசனை செய்து, படைவீரருக்கு நிரம்பப் பணம் கொடுத்து, "நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது இரவில் அவருடைய சீடர் வந்து அவரைத் திருடிச் சென்றனர் என மக்களுக்குச் சொல்லுங்கள். ஆளுநரின் காதுக்கு இது எட்டுமாயின் அவரிடம் சொல்லி உங்களுக்கு ஒரு தொந்தரவும் வராதபடி, நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்," என்றனர். அவர்களும் பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுக்குச் சொல்லிக் கொடுத்தபடி செய்தார்கள். இந்நாள் வரை யூதரிடையே இக்கதை பரவி இருக்கிறது.

(மத்தேயு 28 : 11-15)

*கிறிஸ்து மரிக்கவில்லை என்பதற்குப் பதில் அளித்து விட்டார் ரைமார்! ரைமார் வேதாகமத்தைத் திறந்த மனதுடன் படித்திருந்தாரென்றால் அப்போஸ்தலர்கள் எவ்வளவு வீரம் படைத்தவர்கள் என்பது தெரிந்திருக்குமே! கிறிஸ்து கைது செய்யப்பட்டார் என்றவுடன் ஓடி ஒளிந்த வீரர்கள் அவர்கள்! வேலைக்காரிக்குப் பயந்து தம் குருவை மறுதலித்தவர் இக்குழுவின் தலைவர். கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் அறையின் கதவுகளை மூடிக்கொண்டு பதுங்கி இருந்தவர்கள். இத்தீரர்கள் தாம், வீரத்துடன் வெளியே வந்து கிறிஸ்துவின் உடலைக் களவாடிச் சென்று மறைத்து வைத்துவிட்டுக் கிறிஸ்து உயிர்த்தார் என்று சொன்னார்களோ? தாங்களே அவரது உடலை ஒளித்து வைத்திருந்தார்களாயின், கிறிஸ்து உண்மையிலே உயிர்த்தார் என்பதற்காகத் தங்கள் உயிரையே கொடுத்திருப்பார்களா? கிறிஸ்துவின் உயிர்ப்பு உண்மை என்பதற்குச் சாட்சியாகத் தங்கள் இரத்தத்தையே சிந்தினார்கள்! அப்படி இருக்க, "தூங்கியவர்கள்" கூறிய கூற்றை நாம் உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்; ஆனால் தாம் கூறியது உண்மை என்பதை நிலைநாட்டத் தங்கள் இரத்தத்தையே சிந்தியவர்களின் கூற்று பொய்யாகி விட்டதாம்!! களவாடப்பட்ட கிறிஸ்துவின் உடலைக் கண்டு பிடித்து கிறிஸ்து உயிர்த்தார் என்ற போதனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை? மாறாக இங்ஙனம் போதிக்காதேயுங்கள் என்று ஏன் கூறவேண்டும்? ரோமைப் பேரரசும், யூதர் படையும் பன்னிருவர் களவாடிய ஓர் உடலைக் கண்டு பிடிக்க முடியவில்லை. உடல் இருந்தால்தானே கண்டு பிடிக்க முடியும். கல்லறைதான் காலியாயிருந்ததே! ஏற்றுக்கொள்ளக் கூடிய, அறிவுக்கு ஒத்த விளக்கம் கொடுக்கட்டும்!*



## 3. *மாயக்காட்சிகளா?* (Hallucination)

*ரெனான்* (Renan), A. *மேயர்* (Meyer) *போன்றவர்களின் கொள்கைப்படி கிறிஸ்துவின் சீடர்கள், முக்கியமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றிய பெண்கள், கிறிஸ்துவின் வேதனைகளையும் மரணத்தையும் கண்ட பின்பு, மிக்க உணர்ச்சி வசப்பட்டு, திடுக்கிட்ட ஒரு நிலைமையிலிருந்தார்கள். தாம் உயிர்ப்பதாகக் கிறிஸ்து அடிக்கடி கூறியதையும், இந்நிலையில் ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆதலால் உள்ளத்திலேயே சேசு கல்லறையிலிருந்து உயிர்த்து விட்டார் என்று நிச்சயித்துக் கொண்டார்கள். கிறிஸ்துவைக் காட்சியில் கண்டதாக நம்பிக் கொண்டார்கள்; ஆனால் உண்மையில் அவர்கள் கண்டவை மாயக் காட்சிகளே!*

*சேசுவின் சீடர்கள் எவ்வளவுதான் வேதனையான நிலைமையிலிருந்தாலும், நற்செய்தி வரலாற்றிலிருந்து ஓர் உண்மை மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது. அதாவது கிறிஸ்துவின் உயிர்ப்பை ஆவலுடன் எதிர்நோக்காமலிருந்தது மாத்திரமல்லாமல், அவர்கள் உள்ளத்தில் சந்தேகம் குடி கொண்டிருந்தது. கிறிஸ்துவைப் பற்றி நம்பிக்கையை இழக்கக் கூடிய நிலையிலிருந்தார்கள். "அவர் தாம்" மெசியாவாக இருப்பார் என்று எண்ணி இருந்தோம்., ஆனால்! போன்ற வார்த்தைகள் சந்தேகத்தை ஊர்ஜிதம் பண்ணுகின்றன.*

இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் இயேசு, அவர்கள் நடுவே தோன்றி, "உங்களுக்குச் சமாதானம்" என்றார். அவர்கள் திடுக்கிட்டு, அச்சம் கொண்டு, ஏதோ ஆவியைக் காண்பதாக எண்ணினர். அப்போது அவர் அவர்களை நோக்கி, "ஏன் இந்தக் கலக்கம்? உங்கள் உள்ளத்தில் இத்தகைய எண்ணங்கள் எழுவானேன்? என் கைகளையும் கால்களையும் பாருங்கள். நானேதான்; தொட்டுப் பாருங்கள். நீங்கள் என்னிடம் காணும் எலும்பும் தசையும் ஆவிக்குக் கிடையாது" என்றார். இப்படிச் சொன்ன பின்பு தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காட்டினார். அவர்களோ, மகிழ்ச்சி மிகுதியால் இன்னும் நம்பாமல் வியந்து கொண்டிருக்கும் பொழுது, 'உண்பதற்கு இங்கு ஏதாவது உங்களிடம் உண்டா?' என்றார்.

(லூக்கா. 24 : 36-41)

அவர்களுடைய சந்தேகம், நம்பமறுக்கும் குணம் எவ்வளவு தூரம் உருவெடுத்து நின்றது என்பதற்கு தோமையாருக்குக் கிறிஸ்து காட்சி கொடுக்கும்போது நடந்ததே சாட்சி.

"பன்னிருவருள் ஒருவரான திதிமு என்ற தோமையார் இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், 'ஆண்டவரைக் கண்டோம்' என்றதற்கு அவர், அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்கமாட்டேன்' என்றார். எட்டு நாளுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் வீட்டில் இருந்தனர். தோமையாரும் அவர்களோடு இருந்தார். கதவுகள் மூடியிருக்க, இயேசு வந்து அவர்களிடையே நின்று, 'உங்களுக்கு சமாதானம்' என்றார். பின்பு தோமையாரை நோக்கி, 'இங்கே உன் விரலை இடு; இதோ என் கைகள் உன் கையை நீட்டி என் விலாவில் இடு; விசுவாசம் அற்றவனாய் இராதே 'விசுவாசங்கொள்' என்றார். அப்



போது தோமையார் அவரை நோக்கி, "என் ஆண்டவரே! என் கடவுளே!" என்றார். இயேசுவோ, என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய், காணாமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்றோர்! என்றார்.

(அருளப்பர் 20 : 24-29.)

### 4. சேசு— ஒரு கட்டுக்கதையா?

மேற்கூறியதிலிருந்து, சமீபத்தில் சோவியத்நாடு, 'சேசு- ஒரு கட்டுக்கதை, கிறிஸ்துவம் உரோமை அடிமைகளின் மதம்' என்று கூறியிருக்கும் செய்தி எவ்வளவு மட்டமான விளம்பரம், எவ்வளவு வெட்கமில்லாமல் மற்றவர்களைக் காப்பியடித்தது என்பது தெளிவாகும். கிறிஸ்துவம் அடிமைகளின் மதம் என்ற குற்றச்சாட்டை செல்சஸ் (Celsus) கி.பி. 3வது—4வது நூற்றாண்டுகளிலே வீசி எறிந்தான். சோவியத் ஸ்தாபனம் வெளியாக்கிய செய்தி எத்தனை நூற்றாண்டு பின்தங்கியதென்று நீங்களே பாருங்கள்! அக்குற்றச்சாட்டு உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், அதினால் என்ன? கடவுளின் மக்கள் என்னும் சுதந்திரத்தை உரோமை அடிமைகளுக்கு வழங்கியதில் பெருமைப்படுகின்றது கிறிஸ்துவம். சோவியத் இயந்திரத்தின் ஒரே பெருமை என்ன? இலட்சக் கணக்கான சுதந்திரமக்களை அடிமையாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது.

### கிறிஸ்துவின் சவால்:

ஒவ்வொரு காலத்தின் மக்களுக்கும் கிறிஸ்து ஒரு நிரந்தரமான சவாலாக இருக்கின்றார். அவர் பிறந்தபோது தொடங்கி வைத்த புரட்சிச் செயல் காலம் போகப்போக சக்தி பெருக்கிக்கொண்டே போயிருக்கின்றது. கீழ்த்திசை ஞானிகள் எருசலேமுக்கு வந்து, யூதர்களின் அரசர் எங்கே பிறந்திருக்கின்றார் என்று கேட்டவுடனே, எருசலேம் முழுவதும் திடுக்கிட்டது. ஏரோதன், சேசு, தனக்குப் போட்டியாக வருவார் என்று பயந்து, பெத்லகேம் குழந்தைகளைக் கொன்று குவித்தான்.

145372

பெருவயதினராகிய சிமியோன், சேசு குழந்தை எருசலேம் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டதைக் கண்டபோது, முன்னறிவாகச் சொல்லுவார்: "இதோ! இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ, எழுச்சியாகவோ அமைந்துள்ளான்; எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்......" (லூக்கா, 2 : 34–35)

நற்செய்தி நூலின் ஒவ்வொரு பக்கத்திலேயும், கிறிஸ்துவின் இந்த சவாலுக்கு மக்கள் விடை அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

### மக்கள் எதிர்க்கும் அறிகுறி

பொதுவாக யூதர்கள் எல்லோருக்கும் சேசு ஒரு புதிராகவும், மறுக்கப்படும் அடையாளமாகவும் இருந்தார். "நீர் இதெல்லாம் செய்து வருவதால், உம்மை உலகிற்கு வெளிப்படுத்தலாமே" (அரு. 7 : 4) என்று அவருடைய உறவினர் ஏளனமாகப் பேசினர். "அவருடைய சகோதரர் திருவிழாவுக்குப் போனபின், அவர் வெளிப்படையாகப் போகாமல் மறைவாகச் சென்றார். திருவிழாவின்போது யூதர் 'அவர் எங்கே?' என்று அவரைத் தேடினர். சிலர், 'அவர் நல்லவர்' என்றனர். சிலரோ, 'இல்லை, அவன் மக்களை ஏமாற்றுகிறான்' என்றனர். மக்கள் கூடியிருந்த இடங்களிலெல்லாம் இப்படி அவரைப்பற்றி முணுமுணுவென்று பேசிக்கொண்டனர்." (அருளப்பர் 7 : 10–12) அவர் வாயினின்று எழுந்த அருள் மொழிகளைக் கேட்டவுடன், 'இவர் சூசையின் மகனன்றோ?' (லூக். 4 : 22) என்று வியந்தனர். "யாரிடமும் பாடம் கேட்காத இவனுக்கு இவ்வளவு அறிவு எப்படி வந்தது?" (அரு. 7 : 15). கிறிஸ்துவை கைதியாகப் பிடித்து வரும்படி, தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பிய காவலர்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் காவலரிடம், "அவனை ஏன் பிடித்துக்கொண்டு வரவில்லை?" என்று கேட்டனர். காவலரோ, "எவரும் அவரைப்போல் என்றுமே பேசினதில்லை" என்றனர். (அரு. 7 : 46)



### சேசுவின் விரோதிகள் :

தங்கள் பொருளாதார நிலைக்கும் செல்வாக்குக்கும் கிறிஸ்து ஓர் அபாயம் என்றும், தங்கள் வெளிவேஷத்தையும், உயிரற்ற மத அனுசாரத்தையும் கண்டிப்பவர் என்றும் அறிந்து அவரைப் பகைக்கலாயினர். மக்களிடையே அவரைப்பற்றி அவதூறாய்ப் பேசி அவருடைய செல்வாக்கை மக்கள் மத்தியில் குறைக்க முயன்றனர். "நாங்களோ மோயீசனுடைய சீடர். கடவுள் மோயீசனோடு பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும். இவன் எங்கிருந்து வந்தான் என்பது எங்களுக்குத் தெரியாது" என்றனர். (அருளப்பர் 9 : 28–29). மேலும் அவர்கள் நிக்கோதேமுஸ் என்பவரிடம், "நீரும் கலிலேயரோ? மறைநூலை ஆராய்ந்து பாரும். கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் எவரும் தோன்றுவதில்லை என்பது தெரியவரும்" என்றனர். (அருளப்பர் 7 : 52). கிறிஸ்துவை அவமானமாகவும் பேசினர். "நீ சமாரியன், பேய் பிடித்தவன் என்று நாங்கள் சொன்னது சரிதானே?" (அருளப்பர் 8 : 48). வரி வசூலிப்பவர்கள், பாவிகள், முதலியோரோடு பழகுகிறார் என்றும், மோயீசனின் சட்டத்தை மீறுகிறார் என்றும், ஓய்வு நாளை அனுசரிப்பதில்லை என்றும் குற்றம் சாட்டினர்.

இறுதியாக அவரைக் கைதியாக்கி, நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்... சாட்டப்பட்ட குற்றம்! தேவதூஷணம் பேசினார், சேசாருக்கு வரி செலுத்தக்கூடாதென்று கூறினார்! பிலாத்து திரும்பத்திரும்ப அவரிடம் தாம் குற்றம் ஒன்றும் காணவில்லை என்று கூறினான். ஆயினும் யூதக் குருக்களின் பிடிவாதத்தினாலும், சேசாரிடம் தனக்குள்ள நட்புக்குப் பங்கம் ஏற்படக்கூடாது என்பதினாலும், கிறிஸ்துவைச் சிலுவை மரணத்திற்குத் தீர்வையிட்டான்.

### மீட்பின் அடையாளம் :

ஆயினும் உண்மையைத் தேடி அலைந்தோர்க்கு, கடவுளை ஏற்றுக்கொள்ள திறந்த உள்ளங் கொண்டிருந்

தோர்க்கு, கிறிஸ்து, தங்கள் வினாக்களுக்கு விடையாகவும், தங்கள் நம்பிக்கைக்கும் ஆசைகளுக்கும் நிறைவாகவும், தங்கள் தேடுதலின் முடிவாகவும் அமைந்தார்.

ஏரோதின் சிறையிலிருந்து திரு முழுக்கு அருளப்பர் இயேசு யார் என்பதைக் கேட்டுவர தன் சீடர்களை அனுப்பினார். "வரப்போகிறவர் நீர்தாமோ? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?" என்று தம் சீடர் வழியாகக் கேட்டு அனுப்பினார். இயேசு மறுமொழியாக: "நீங்கள் கண்டதையும் கேட்டதையும் அருளப்பரிடம் போய் அறிவியுங்கள். குருடர் பார்க்கின்றனர். முடவர் நடக்கின்றனர். தொழுநோயாளர் குணமடைகின்றனர். செவிடர் கேட்கின்றனர். இறந்தவர் உயிர்க்கின்றனர். எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது, என்னைப் பற்றி இடறல்படாதவன் பேறுபெற்றவன்" என்றார். (மத்தேயு 11 : 2-6)

நற்செய்தி கூறுவது போல, ஒரு தருணம், அவருடைய சீடருள் பலர் அவருடைய கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடாததாயிருக்கிறது என்று சொல்லி அவரை விட்டுப் பிரிந்து போனார்கள். (அருளப்பர் 6 : 60) ஆயினும் மற்றவர்கள் திடமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள். மற்றவர்களின் உள்ளக் கிடக்கையை ஒன்று திரட்டி இராயப்பர் கூறியதாவது: "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர். இதை நாங்கள் விசுவசிக்கிறோம்; இதை நாங்கள் அறிவோம்." (அருளப்பர் 6 : 67-69)

இயேசு எங்ஙனம் நமது மீட்பு ஆகின்றார் என்பதைப் புனித சின்னப்பர் தெளிவாக எடுத்துரைக்கின்றார்: "ஆனால் கடவுள் இரக்கப்பெருக்கமுள்ளவர். அன்புமிக்கவர். நம் குற்றங்களால் நாம் இறந்தவர்களாய் இருந்தபோதிலும் அவர் நம் மீது கொண்ட பேரன்பினால் கிறிஸ்துவோடு நாம் உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்புப் பெற்றிருப்பது அருளாலேயே." (எபேசியர். 2 : 4-5) இம்



மீட்புச் செயலைக் கிறிஸ்து சிலுவையின் மூலமாகச் செய்தார். "அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய், இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்பு அடைகிறோம். குற்றங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறோம். அந்த அருளை முழு ஞானமாகவும் அறிவுத்திறனாகவும் நம்மில் பெருகச் செய்தார்." (எபேசியர் 1 : 7-8).

## நான் யார் என்று நீங்கள் கூறுகிறீர்கள்?

நன்மனம் படைத்த ஒவ்வொருவருக்கும் இவ்வறைகூவலைக் கிறிஸ்துதாமே விடுக்கின்றார். பிலிப்புச் செசரியா என்னுமிடத்தில் கிறிஸ்து தன் சீடரிடம் "மனுமகனை யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அவர்களோ, சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாசென்றும், சிலர் எரேமியாஸ் அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர். (மத்தேயு 16 : 13-14)

வரலாற்றின் போக்கில் நாம் காண்பதுவும் இதுதான். தங்கள் பிரியம்போல் சேசுவைப்பற்றிப் பல கொள்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள் மக்கள். தங்கள் சிந்தனைக்கு உகந்த சேசுவை அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் நற்செய்தியில் காணப்படும் உண்மையான, வரலாற்றுக் கிறிஸ்துவைப் பொருட்படுத்தாமல், கடந்து செல்லுகிறார்கள்.

அப்போஸ்தலர் கொடுத்த இத்திட்டமில்லா விடையால் கிறிஸ்து திருப்தியடையவில்லை. அவருடைய சீடர்கள் அவரது போதனையைக் கேட்டிருக்கிறார்கள், அவருடன் நெருங்கிப் பழகியிருக்கின்றார்கள். அவர் மீது தங்களுக்குள்ள விசுவாசத்தை வெளிப்படையாக எடுத்துரைக்கும் தருணம் வந்துவிட்டது ஆகலால், "நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று இயேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்" என்றார். (மத்தேயு 16 : 16)

*கிறிஸ்துவின் அறைகூவல் உங்களுக்கும் எனக்கும் அளிக்கப்படுகின்றது. கட்டுரைகள் ஆய்வுரைகள் மூலமாகவோ, சக கிறிஸ்துவர்கள் நண்பர்கள் மூலமாகவோ நாம் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம், கிறிஸ்துவைப்பற்றி நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயம் திட்டமற்றதாய், வலிந்து பெறப்பட்டதாய், ஏன் தவறானதாகக்கூட இருக்கலாம். மற்றவர்களின் அபிப்பிராயங்களின் பின்னே பாதுகாப்பாக இருந்து கொள்ளவேண்டும் என்பதைக் கிறிஸ்து விரும்புவதில்லை. நாமே சிந்தித்து, மனதைத் திட்டப்படுத்தி ஒரு சொந்த முடிவுக்கு வரவேண்டும் என்று ஆசிக்கிறார். கிறிஸ்து நம்மைச் சந்திக்கும் போது நாம் ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்கவேண்டும். கிறிஸ்து உங்களையும், என்னையும் நம்மில் ஒவ்வொருவரையும் பார்த்து, "நான் யார் என்று நீ நினைக்கிறாய்?" என்று கேட்கிறார்.*

*உம்முடைய விடைதான் என்ன?*

*இவ்வினாவுக்கு விடையளிக்க நாம் அடிப்படைக்கே செல்லவேண்டும். நற்செய்தி நூல்களைத் திறந்து, செபித்துக்கொண்டே படிக்கவேண்டும். வேதாகமங்களின் பக்கங்களிலே கிறிஸ்துவைச் சந்திப்போம். எழுதப்பட்ட தேவ வார்த்தைகள் மூலமாக அவர் நம்முடன் பேசுகிறார். காலத்தின் போக்கிலே எண்ணிலா மக்களின் சிந்தனையைக் கவர்ந்து அவர்களை இழுத்த அதே வார்த்தைகளுடன் நம் உள்ளத்தையும் அக்கினியால் பற்றி எரியச் செய்யும்.*

மக்கள் உயிரைப் பெறும்படி, அதை மிகுதியாய்
பெறும்படி வந்தேன். " அருளப்பர். 10 : 10.

நானே வழியும் உண்மையும் உயிரும், என்வழியா
யன்றி எவரும் பரம தந்தையிடம் வருவதில்லை.
**அருளப்பர் 14 : 6.**

நானே உலகின் ஒளி :
என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான்.
உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.
**அருளப்பர் 8 : 12.**

145372



நானே உயிர்தரும் உணவு,
என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது.
என்னில் விசுவாசம் கொள்பவனுக்கு
என்றுமே தாகம் இராது.
அருளப்பர் **6 : 35**

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே,
எல்லோரும் என்னிடம் வாருங்கள்,
உங்களை நான் இளைப்பாற்றுவேன்,
மத்தேயு **11 : 28**

நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்.
மத்தேயு **5 : 6**

மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.
மாற்கு **2 : 5**

தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு யாரிடமும் இல்லை.
அருளப்பர் **15 : 12**

தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும்
அழியாமல்
முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு
அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும்
அளவுக்குக்
கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது
அதற்குத் தீர்ப்பளிக்க அன்று,
அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே.
அருளப்பர் **3. 16 : 17**

முடிவில்லா வாழ்வு என்பது
உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும்
நீர் அனுப்பிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே.

அருளப்பர் 17 : 3

இறுதியாக அன்பு நண்பா, உம்மிடமிருந்து விடை பெறுமுன் உம்மிடம் வேண்டிக்கொள்வது இதுதான். விசுவாசத்துடனும் திறந்த உள்ளத்துடனும் இப்புனித ஆய்வை நடத்தினீர் ஆயின் உண்மையாய் கிறிஸ்து வாக்களித்த ஆன்ம அமைதியை— உலகு கொடுக்க முடியாத தெய்வீக அமைதியைக் கண்டடைவீர்.

உமக்காக என்றும் கிறிஸ்துவை நோக்கி வேண்டுதல்களை விடுக்கும்,

அன்பு நண்பன்

---

We thank, Prem Mary for allowing us to use their material—*Editor*.

கிறிஸ்துவைப் பற்றி அறிய விரும்பும் நண்பர்கள், அஞ்சல் மூலம் திருமறை உரையாடல்களைப் பெறலாம், மாதம் ஒருமுறை மலரும் பொய்யா விளக்கையும் பெறலாம். உங்களால் இயன்ற பொருள் உதவியும் வழங்கினால் (ஆண்டுக்கு ரூ. 2) எமக்குப் பெரும் உதவியாய் இருக்கும்.

ம. ஆசிர்வாதம் சேசு சபை,
புனித மரியன்னை பள்ளி,
த. பெட்டி. 56. மதுரை-1.